# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

**முதல் தகவல் அறிக்கை**

~~(Under Section 154 Cr.P.C.)~~ (Under Section 173 BNSS) C 8129326

~~(குற்ற.வி.மு.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

1. District : ஈ.ரோடு
மாவட்டம்
PS: ஊ.த.த பிரிவு
காவல்நிலையம்
Year: 2024
ஆண்டு
FIR No.: 06/AC/2024
மு.த.அ. எண்
Date: 09.10.202
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act — Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: 1988 as amended by the — Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : செப்டம்பர் மாதம் கடைசி வாரம்
நாள் முதல்
Date to : 09.10.2024
நாள் வரை

Time Period :
நேர அளவு
Time from : —
நேரம் முதல்
Time to : 11.40 மணி
நேரம் வரை

(b) Information Received at PS. Date : 09.10.2024
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 15.00 மணி
நேரம்

(c) General Diary Reference : Entry No(s) GD VOL - III
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 15.00 மணி
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தமிழில் கணினியால் தட்டச்சு செய்யப்பட்டு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 90 கி.மீ மேற்கு

Beat Number :
முறைக் காவல் எண் —

(b) Address : கிராம நிர்வாக அலுவலர், 19 ஆசனூர் கிராமம், தாளவாடி வட்டம், ஈ.ரோடு மாவட்டம்
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : போ. ஆனந்தன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ ~~Husband's~~ Name : போலப்பன் (லேட்
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு 35 வருடம்
(d) Nationality :
நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue :
வழங்கப்பட்ட நாள் —
Place of Issue :
வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation :
தொழில் விவசாயம்
(g) Address : 2/203, சிகட்டி, அரேப்பாளையம், ஆசனூர் பஞ்சாயத்து, தாளவாடி தாலுக்கா, ஈ.ரோடு மாவட்டம்.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ருத்திரச்செல்வன், கிராம நிர்வாக அலுவலர், 19 ஆசனூர்-கிராமம், தாளவாடி தாலுக்கா, ஈ.ரோடு மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து - இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B. ஆனந்தன்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம். /
பெருவிரல் இரேகைப் பதிவு

09/10/2024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 09.10.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 21.30 மணி

Name: பெயர் G. ஆறுமுகம்
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ..........
ஊ.த.க.பிரிவு, T.T. ரோடு.

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr. No 6/AC/2024 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் G.ஆறுமுகம் ஆகிய நான் 09.10.2024 தேதி மாலை 15.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு.B.ஆனந்தன், வயது-35, த/பெ. போலப்பன், 2/203 சீகட்டி கிராமம், அரேப்பாளையம் அஞ்சல், ஆசனூர் ஊராட்சி, தாளவாடி தாலூக்கா, ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் கணிணி தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து பூர்வமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் B.ஆனந்தன், வயது-35, த/பெ. போலப்பன் (லேட்), 2/203 சீகட்டி கிராமம், அரேப்பாளையம் அஞ்சல், ஆசனூர் ஊராட்சி, தாளவாடி தாலூக்கா, ஈரோடு மாவட்டம். பெறுதல் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கருங்கல்பாளையம், ஈரோடு. ஐயா, நான் தாளவாடி தாலூக்கா, ஆசனூர் ஊராட்சி, அரேப்பாளையம் அஞ்சல், சீகட்டி கிராமத்தில் என் மனைவி மல்லிகா, என் மாமனார் திரு.நஞ்சப்பன் மற்றும் மாமியார் ஆகியோருடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது மாமனர் நஞ்சப்பன் அவர்களுடன் உடன் பிறந்தவர்கள் ஜடேமாதன் (அண்ணன்) மற்றும் திருமதி.பாக்கியா (தங்கை) ஆவார்கள். மேற்படி எனது மாமனாரின் அப்பா ஜடேகவுடர் என்பவர் சுமார் 54 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். அவர் பெயரில் ஒசட்டி கிராமத்தில் சுமார் 4 ஏக்கர் விசாய பூமியும், வீடும் உள்ளது. அதில் இரண்டு ஏக்கர் நிலத்தை விற்று பங்கு பிரித்துக்கொள்வதாக முடிவு செய்யப்பட்டது. அதனால் சொத்துக்களை பிரித்து பாகபிரிவினை செய்து பத்திரம் பதிவு செய்வதற்கு ஜடேகவுடர் அவர்களின் வாரிசுகளுக்கு வாரிசு உரிமை சான்று தேவைப்பட்டது. ஜடேகவுடர் அவர்களின் வாரிசுதாரர்கள் அனைவரும் வயதானவர்கள் என்பதாலும், வெளி அனுபவம் இல்லாத காரணத்தினாலும் எனது மாமனார் நஞ்சப்பன் ஒரு வாரிசு என்பதாலும், என்னை, வாரிசு சான்று பெறுவதற்கான வேலைகளை செய்ய சொன்னார்கள். அதன்படி கடந்த 19.09.2024 ஆம் தேதி எனது பெரியமாமனார் ஜடேமாதன் அவரது பெயரில் அரேப்பாளையம் ஊரில் உள்ள இ.சேவை மையத்தில் ஜடேகவுடர் அவர்களின் வாரிசுதாரர்களான 1) ஜடேமாதன், 2) நஞ்சப்பன் மற்றும் 3) திருமதி.பாக்கியா ஆகியோர்களின் பெயர்களை சேர்த்து விண்ணப்பம் செய்தேன். அதன் விண்ணப்ப எண். TN-7202409191671 தேதி 19.09.2024 ஆகும். அதன்பின்பு கடந்த 26.09.2024 ஆம் தேதி நானும், எனது பெரியப்பா மகன் சிவராஜ் அவர்களும் சேர்ந்து தாளவாடி தாசில்தார் அவர்களை அவரது அலுவலகத்தில் மதியம் சந்தித்து எனது பெரியமாமனர் ஜடேமாதன் பெயரில் விண்ணப்பித்த வாரிசுதாரர் சான்று விண்ணப்பம் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் உங்கள் ஆசனூர் கிராம நிர்வாக அலுவலர் அவர்களை சென்று பாருங்கள் என்று சொன்னார். அதன்படி நானும் பெரியப்பா மகன் சிவராஜ் அவர்களும் செப்டம்பர் மாதம் கடைசி வாரத்தில் ஒரு நாள் ஆசனூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ருத்திரச்செல்வன் அவர்களை நேரில் சந்தித்து நான் எனது பெரியமாமனார் ஜடேமாதன் பெயரில் விண்ணப்பம் செய்திருந்த வாரிசுதாரர் சான்று சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் ஜடேகவுடர் இறந்து சுமார் 54 வருடங்கள்

ஆகிறது என்றும் வருடத்திற்கு சுமார் ரூ.1000 வீதம் மொத்தமாக ரூ.60,000/- தனக்கு தரவேண்டும் என கேட்டார். அப்போது நான் வீட்டில் கலந்து ஆலோசித்து விட்டு சொல்வதாக சொல்லி விட்டு வந்துவிட்டோம். இதுசம்மந்தமாக வீட்டில் கலந்து ஆலோசித்தபோது கிராம நிர்வாக அலுவலர் பணம் அதிகமாக கேட்டுள்ளதாக சொன்னார்கள். அதனை தொடர்ந்து நானும் பெரியப்பா மகன் சிவராஜ் அவர்களும், கடந்த 03.10.2024 ஆம் தேதி சாய்ங்காலம் சுமார் 4.30 மணிக்கு ஆசனூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ருத்திரச்செல்வன் அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து வாரிசுதாரர்கள் விண்ணப்பம் சம்மந்தமாக கேட்டோம். அப்போது அவர் ஏற்கனவே இதுசம்மந்தமாக ரூ.60,000/- கொடுக்குமாறு சொல்லியுள்ளேன் என்றார். அதற்கு நான், எங்கள் வீட்டில் உள்ளவர்கள் நீங்கள் கேட்ட பணம் அதிகமாக உள்ளது என்று கூறுகிறார்கள் என்பதனை கூறி பணத்தை குறைக்கச்சொன்னேன். அதற்கு அவர் பணம் ரூ.3000/- குறைத்துக்கொண்டு ரூ.57,000/- ரூபாய் கொடுக்கச்சொன்னார். அதற்கு நாங்கள் வீட்டில் கேட்டு விட்டு சொல்வதாக கூறி வீட்டிற்கு வந்துவிட்டோம். அதன்பின்பு நானும் பெரியப்பா மகன் சிவராஜ் அவர்களும் கடந்த 05.10.2024 ஆம் தேதி வாரிசுதாரர் சான்றுகோரிய விண்ணப்பத்தின் தற்போதைய நிலை குறித்து அறிய இ.சேவை சென்று பிரின்ட் அவுட் எடுத்து பார்த்ததில் Send Back to Citizen மற்றும் One legal heirs not added என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து அன்றே மதியம் சுமார் 1.30 மணிக்கு கிராம நிர்வாக அலுவலர் திரு.ருத்திரச்செல்வன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து அவர் கேட்ட பணத்தை குறைத்துக் கொள்ளுமாறு மீண்டும் கேட்டோம். அதற்கு அவர் உயர் அதிகரிகளையும் நானே பார்த்து வேலையை முடித்து வாரிசு சான்று பெற்றுத்தருகிறேன் என்றும், அதற்காக மேல் அதிகாரிகளுக்கு பணம் கொடுக்க வேண்டும் என்றும், அலுவலக செலவு உள்ளது என்றும் கூறி ரூ.50,000/-ஐ தனக்கு கொடுத்து விடுங்கள், இதற்கு மேல் குறைக்க முடியாது என்றும் கண்டிப்பாக கூறிவிட்டார். மேலும் பைலை மூவ்செய்வதற்கு முன்பணம் வேண்டும் என்றும் கேட்டார். நான் ரூ.5000/- தான் உள்ளது என்று கூறினேன். அதைவைத்து மூவ்பண்ண முடியாது என்று சொல்லி, இருந்தாலும் பரவாயில்லை அந்த பணத்தை கொடுங்கள் என்று கேட்டு வாங்கிக்கொண்டார். விண்ணப்பத்தின் தற்போதைய நிலை குறித்த விபரங்கள் அடங்கிய மேற்படி பிரின்ட் அவுட்டை அவரிடம் காண்பித்து, நான் அனுப்பிய விண்ணப்பம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. எனவே நான் மீண்டும் இ.சேவை மையம் மூலம் வாரிசு தாரர் சான்று வேண்டி மீண்டும் விண்ணப்பிக்கட்டுமா என்று கேட்டபோது அதை நான் பார்த்துக்கொள்கிறேன், நீங்கள் பணம் மட்டும் ரெடி செய்துவிட்டு வரும் திங்கள் அல்லது செவ்வாய் கிழமை வாருங்கள் என்று சொன்னார். என்னால் அவர்கேட்ட பணத்தை ரெடி பண்ண முடியவில்லை. இதனிடையில் நேற்று 08.10.2024 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை சுமார் 3.40 மணிக்கு அரேப்பாளையத்தில் நானும் பெரியப்பா மகன் சிவராஜ் அவர்களும் ஒன்றாக இருந்தபோது, ஆசனூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ருத்திரச்செல்வன் அவர்கள் அவரது செல்போன் எண்.7598880001ல் இருந்து சிவராஜ் அவர்களின் செல்போன் எண். 9994083890-க்கு தொடர்பு கொண்டு ஆனந்த் தொகை ரெடி செய்து விட்டாரா?

என்று கேட்டார். அப்போது அதற்கு அவர் வெளியில் கடன் கேட்டுள்ளார், பணம் கிடைத்தவுடன் கொடுத்துவிடுவார் என்று கூறினார். அதேபோல் இன்று 09.10.2024 ஆம் தேதி புதன் கிழமை காலை சுமார் 11.40 மணிக்கு நாங்கள் இருவரும் ஒன்றாக அரேப்பாளையத்தில் இருந்தபோது, ஆசனூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ருத்திரச்செல்வன் அவர்கள் அவரது செல்போன் எண்.7598880001ல் இருந்து சிவராஜ் அவர்களின் செல் எண். 9994083890-க்கு தொடர்பு கொண்டு ஆனந்திடம் நான் கேட்ட பணத்துடன் நாளை 10.10.2024 ஆம் தேதி நேரில் வருமாறு சொல்லச் சொன்னார். அவரும் சரி என்று சொல்லிவிட்டார். பிறகு, நாங்கள் யோசனை செய்ததில், லஞ்சம் கொடுத்து வாரிசுசான்று பெற எங்களுக்கு விருப்பம் இல்லை. எனவே பெரியமாமனார் ஜடேமாதன் பெயரில் வாரிசு சான்று வேண்டி விண்ணப்பம் செய்ததின் பேரில் வாரிசு சான்று கோரிய விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற்கொண்டு வாரிசு சான்று பெற்றுத்தர ஏற்கனவே ரூ.5000/- அட்வான்சாக பெற்றும், மேலும் லஞ்சமாக ரூ.45,000/- கேட்கும் ஆசனூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ருத்திரச்செல்வன் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (B.ஆனந்தன்) 09.10.2024 ஈரோடு 09.10.2024.

Sir, Received the above said tamil computer typed complaint on 09.10.2024 at 15.00 hrs. Sd/- (xxxxxxxx) 09.10.2024 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.06/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 against the accused Tr.Ruthiraselvan, Village Administrative Officer, Hasanur Village, Thalavady Taluk, Erode District today on 09.10.2024 at 20.30 hrs Sd/- (xxxxxxxx) 09.10.2024 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.B.Ananthan, age 35, s/o Polapan, 2/203, Seegatty Village, Araipalayam post, Hasanur Panchayat, Thalavady taluk, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

09/10/2024

(G.Arumugam)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.